மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆக்கிரமிப்பு பற்றி தனிக் கேள்வி போட வேண்டும். இந்த ஏரி சிறு பாசனத் திட்டத்தின் கீழ் ரூ. 97,500 செலவில் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே உறுப்பினர் கோரியபடி நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை.

வேப்பங்குளம் கால்வாய்

*** 874 வினா.—திரு. எம். முத்தையா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தாலுகா வேப்பங்குளம் கால்வாய் மராமத்து செய்ய வேண்டி 28–4–1971-ல் மனுச் செய்யப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு என்ன நடவடிக்கையெடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

எலும்பு உர உற்பத்தி நிலையங்கள்

*** 875 வினா.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கதர் கிராமத் தொழில் வாரியத்தால் நடத்தப்படுகின்ற எலும்பு உர உற்பத்தி நிலையங்கள் லாபத்தில் இயங்குகின்றனவா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஆம்.

திரு. **என். கிட்டப்பா :** லாபத்தில் நடந்து வருவதாக அறிவித்தார்கள். அதை விரிவுபடுத்தி இன்னும் சிலயிடங்களில் அத்தகைய உர உற்பத்தி நிலையங்களை ஏற்படுத்த அரசாங்கம் ஆவன செய்ய முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இப்போது நான்கு இடங்களில், கோவை மாவட்டத்தில் எருங்காட்டூர், மதுரை மாவட்டத்தில் எழுமலை, கூடலூர், நெல்லை மாவட்டத்தில் ராயகிரி ஆகிய ஊர்களில் எலும்பு குறைந்த விலையில் கிடைக்கிறது. இங்கே எலும்பைப் பொடியாக்கி உரம் ஆக்கும் தொழிற்கூடங்கள் நல்ல முறையில் இயங்குகின்றன. நன்கு இயங்கக் காரணம் பக்கத்தில் காடு இருக்கிறது. எலும்புகள் குறைந்த விலைக்குக் கிடைக்கிறது. விரிவுபடுத்த செயற்குறிப்பு இல்லை.